**//தனி கவனம்//** **//மிக மிக அவசரம்//**

வேலூர் மாவட்ட முதன்மைக் கல்வி அலுவலரின் செயல்முறைகள்
ந.க.எண்.**4038**/அ**5/2023**, நாள். **26.09.2023**

---

பொருள்: **பள்ளிக்கல்வி – 2011-2012 ஆம் ஆண்டு முதல் அரசு மற்றும் அரசு உதவி பெறும் உயர்நிலை/மேல்நிலைப் பள்ளிகளில் 10,11,மற்றும்12ம் வகுப்பு பயிலும் மாணவர்களின் இடைநிற்றலைத் தவிர்க்கும் பொருட்டு மாணவர்களுக்கு சிறப்பு ஊக்கத்தொகை வழங்கும் திட்டம் செயல்படுத்தப்பட்டுள்ளமை – 2011 – 2012 ஆம் ஆண்டு முதல் 2021-2022 ஆம் ஆண்டு முடிய தங்கள் பள்ளியில் வழங்கப்படாமல் விடுபட்டுள்ள மாணவர்களின் விவரம் கோருதல் – சார்பு**

பார்வை: **சென்னை, தமிழ்நாடு பள்ளிக்கல்வி இயக்குநரின் செயல்முறைகள்,**
ந.க.எண்48848/கே/இ2/2023, நாள் 16.09.2023

---

பார்வையில் காணும் செயல்முறைகளுக்கிணங்க அரசு மற்றும் அரசு/ அரசு நிதியுதவி பெறும் பள்ளிகளில் (சுயநிதி பிரிவு நீங்கலாக) 10,11, மற்றம் 12ஆம் வகுப்புகளில் பயிலும் மாணவ, மாணவியர்கள் இடைநிற்றலை முற்றிலும் தவிர்க்கும் பொருட்டு சிறப்பு ஊக்கத்தொகை வழங்கும் திட்டம் பார்வையில் காணும் செயல்முறைகளின்படி செயல்படுத்தப்பட்டு வருகிறது.

இந்நேர்வில் 2011-2012 ஆம் கல்வி ஆண்டு முதல் 2021- 2022 ஆம் ஆண்டு வரை EMIS மூலமாக பெறப்பட்டுள்ள மாணவர்களின் எண்ணிக்கை மற்றும் விவரங்களின் படி 10,11 மற்றும் 12 ஆம் வகுப்பினை இடையில் நிறுத்தாமல் தொடர்ந்து பயின்ற மாணவர்களுக்கு சிறப்பு ஊக்கத் தொகையான ரூ.பாய் 5000 மற்றும் அதற்கான வட்டித்தொகை TNPFC –ன் மூலமாக மாணவர்களின் வங்கிக்கணக்கில் வரவு வைக்கப்பட்டுள்ளது.

இந்நிலையில் பள்ளி அளவில் தேர்வு செய்து பரிந்துரை செய்யப்பட்ட 12 ஆம் வகுப்பு மாணவர்கள் அனைவருக்கும் சிறப்பு ஊக்கத் தொகையான ரூபாய் 5000 மற்றும் வட்டித் தொகை முழுமையான அளவில் TNPFC – மூலமாக மாணவர்களுக்கு வழங்கப்படவில்லை

எனவும், விடுபட்டுள்ள மாணவர்களுக்கு சிறப்பு ஊக்கத்தொகையினை பெற்று வழங்க நடவடிக்கை மேற்கொள்ள இயக்குநரின் செயல்முறைகளின் வாயிலாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

எனவே 2011-2012 ஆம் ஆண்டு முதல் 2021-2022 ஆம் ஆண்டு வரை நாளது தேதி வரை சிறப்பு ஊக்கத் தொகை பெறப்படாமல் உள்ள மாணவர்கள் இருப்பின் அம் மாணவர்களின் வங்கி புத்தகத்தினை நாளது தேதிவரை (Printout ) எடுத்து மாணவர்களின் வங்கி புத்தகத்துடன் ஒப்பிட்டு சரிபார்த்து சிறப்பு ஊக்கத்தொகையானது இம்மாணவருக்கு வரவு வைக்கப்படவிலை எனபதற்கான தலைமை ஆசிரியர் சான்று மற்றும் இத்துடன் இணைக்கப்பட்டுள்ள படிவத்தில் எவ்வித மாறுபாடு இன்றியும் எவ்வித கலமும் விடுபடாமல் ஆண்டு வாரியாக தனித்தனியாக Excel படிவத்தில் பூர்த்தி செய்து 30.09.2023 மாலை 5.00 மணிக்குள் ceoseca5@gmail.com என்ற மின்னஞ்சல் முகவரிக்கு அனுப்பிவிட்டு, அவ்விவரங்கள் பதிவு செய்யப்பட்ட குறுந்தகட்டினை இவ்வலுவலக அ5 பிரிவில் தனிநபர் மூலம் நேரில் ஒப்படைக்குமாறு தலைமை ஆசிரியர்கள் கேட்டுக்கொள்ளபடுகிறார்கள்.

இணைப்பு
பார்வையில் காணும் செயல்முறைகள்
படிவம் ஆண்டு வாரியாக

ஓம்/- செ.மணிமொழி
முதன்மைக் கல்வி அலுவலர்
வேலூர்

பெறுநர்
தலைமை ஆசிரியர்
அரசு/அரசு நிதியுதவி மேல்நிலைப் பள்ளிகள் (சுயநிதிபிரிவு நீங்கலாக)
வேலூர்

நகல்
மாவட்டக் கல்வி அலுவலர் (இடைநிலை )
மாவட்டக் கல்வி அலுவலகம்
வேலூர்